# தர்ம வாஹினி

☼

## பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

☼

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 5

பெண்களுக்காகட்டும், ஆண்களுக்காகட்டும், கல்வி மிக அவவசியம். பெண்களுக்கு தகுந்த கல்வியைக் கற்பிக்க வேண்டும். பண்பாடுகள் நிறைந்த பெண்கள் உலகுக்கே தர்ம தேவதைகள். பெண்களைத் தர்ம தேவதைகளாக மாற்றும் நல்ல கல்வியைத் தர பெற்றோர்கள் முயற்சிக்க வேண்டும். ஒரு சில குறிப்பிட்ட விஷயங்களில் சுதந்திரம் தருவது பெண்களுக்கு தீமை செய்வதாகும். சர்வநாசத்தைத் தேடித்தரும். அப்படிப்பட்ட வித்தையைப் பெண்களுக்கு கற்பிப்பதை நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ளமாட்டேன், உயர்ந்த நோக்கங்கள் உடையவர்களாக மாற்றும் வித்தையை, கலாச்சாரத்தையே கற்பிக்க வேண்டும். பரிபூரண சுதந்திரம் தர்மத்தையே நாசமாக்க வல்லது. அப்படிப்பட்ட சுதந்திரத்தால் பெண்கள் தம்மைத் தாமே பாழ்படுத்திக் கொள்ளுவார்கள். வித்தியாசமின்றி கலந்து பழகுவது, சீராக்க முடியாத நிலைக்குப் பெண்ணைத் தாழ்த்தி விடும்.

பழங்காலத்தில் கூட கல்விகற்ற பெண்கள் ஏராளமானவர்கள் இருந்தனர். அவர்கள் தம்முடைய அறத்திலிருந்து பிறழாமல், ஆத்மானந்தம் அனுபவித்து வந்தனர். கல்வி புத்திசாலித்தனத்தை வளர்க்க வேண்டும். சாவித்திரி, அநுசூயா, நளாயினி போன்ற பதிவிரதைகள், மீராவைப் போன்ற பக்தர்கள், சூடாவைப் போன்ற யோகிகள் நம் நாட்டில் பிறந்து அறத்தையும், அறக் கல்வியையும் நிலைநாட்டினர். ஒவ்வொரு சமயமும் சுலபா என்ற பெண் தன் வித்தை (கல்வி)யின் சக்தியால், ஆத்ம விசாரணை குறித்து சொற் பொழிவாற்றும்போது ஜனகரைப் போன்ற சக்கரவர்த்திகள் கூட வியப்பு கடலில் மூழ்கி விடுவர். மேன்மையும், புனிதமும் நிரம்பிய அப்படிப்பட்ட பெண்மணிகள், புனிதமும், பக்தியும், ஞானமும் கூடிய நன்னடத்தையால் இன்றைக்கும் கூட பாரதப் பெண்களின் இதயத்தில் இடம் பெற்றிருக்கின்றனர். அவர்களால்தான் இந்நாட்டுப் பெண்கள்ளின் இதயத்தில் இன்றைக்கும் சிறிதளவாவது தெய்வீகம் நிழலாடுகிறது. இந்நாளில் கூட தெய்வீகம் நிரம்பியவர்களும் ஒரு சிலர் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

இந்நாளைய பெண்கள் அக்காலப் பெண்மணிகளிடமிருந்து உற்சாகம் பெற வேண்டும்; அவர்கள் நடத்திய வாழ்க்கை முறையை இவர்களும்

பின்பற்ற வேண்டும். இந்துப் பெண்கள் எப்பொழுதும் தார்மிக, ஆன்மிகத் தத்துவங்களுக்கு முக்கியத்து வம் தர வேண்டும். எவ்வளவு தான் புதுமைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், ஆத்ம தத்துவத்தை மறக்காமல், உள் நோக்கை, உள்ளொளியை வளர்க்கும் வேதாந்தத் தத்துவங்களைக் கற்பிக்கும் நூல்களையும் படிக்க வேண்டும். இப்படிப்பட்ட கல்வி கற்காத பெண் ஆதாரமில்லாத (சிறுது அசைத்தாலும் விழுந்து நாசத்தை ஏற்படுத்தும்) பாறை போன்றவளே.

வேதாந்தத் தத்துவங்களைக் கற்று, பிரம்ம விந்தையில் தேர்ச்சி பெற்ற சுலபாவைப் போன்ற பெண் ரத்தினங்களை தோற்றுவித்த நாடு பாரதம். அந்தக் காலத்தில் இந்தப் பெண் ரத்தினங்களிடம் உபதேசமும் உற்சாகமும் பெறப் பெரிய பண்டிதர்களும், வித்வான்களும் கூட வருவது வழக்கமாக இருந்தது.

அனைத்தும் எதை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது தெரியுமா? நாட்டின் முன்னேற்றமும், சமுதாயத்தின் முன்னேற்றமும் முறையான பெண் கல்வியை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. பெண்களுடைய ஆத்ம தத்துவத்தைப் பற்றிய ஞானமே (கல்வி), நம் நாட்டுக்கு அதன் பழம் பெருமையை, சிறப்பை மீண்டும் அளிக்கவல்லது. பெண்களுக்கு சீலத்தையும், சிறந்த பண்புகளையும் வளர்க்கும் கல்வியை கற்பிக்கும் பெற்றோர்கள் நாட்டுக்கு நலத்தையும், சாந்தியையும் அளித்தவர்கள் ஆவார்கள்.

பாரத நாட்டின் அந்நாளைய புனிதத்தன்மைக்கும், இந்நாளைய கேவலமான நிலைமைக்கும், அந்நாளைய சாந்தி, சௌக்கியங்களுக்கும், இந்நாளைய அசாந்தி, அக்கிரமங்களுக்கும் பெண் தர்மமே காரணம். அந்த நாளைய தர்மத்தை ஆதாரமாகக் கொண்ட கல்வி முறை, இந்நாளைய அறத்துக்குமாறான கல்விமுறை இவைகளே இந்த யுகப்புரட்சிக்கு காரணம். யுகப்பு ரட்சி என்றவுடன், பூமியும், ஆகாயமும் மாறியதாக எண்ண வேண்டாம். அவைகள் மாறாது; மாற்றவும் யாராலும் இயலாது. மாறியது பண்பாடே.

இன்றைய கல்வி பெயரளவுக்குத்தான் கல்வியே தவிர, செயலளவில் வெறுமையே. இவை அறத்தைச் சார்ந்த கல்வியல்ல. ஆத்மானந்தத்தை அனுபவித்து, ஆத்ம தர்மத்தை உணர்ந்து, அவைகளை மேற்கொண்டு இறைவனின் அருளுக்குப் பாத்திரமாகும்படிச் செய்விக்கும் கல்வியே அந்நாளைய கல்விக்குச் சமமான கல்வி. இறையருள் பெற, நல்லியல்புகளையும், ஆத்ம ஞானம், இனிய சுபாவம் ஆகியவைகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்; பண்புமிக்க செயல், பரிசுத்தம், புலனடக்கம், உயர்ந்த தெய்வீகக் கொள்கையில் விருப்பம் ஆகியவைகளைப் பயின்று அதில் தேர்ச்சி பெற வேண்டும்; இந்நாளில் சில புத்தகங்களைப் படித்து மனப்பாடம் செய்து பட்டம் பெற்று விடலாம். அதனால், மேற்சொன்ன பயிற்சிகளைப் பெற யாரும் முயலுவதில்லை. சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட கல்வியைப் பெண்ணுக்குத் தர வேண்டும். நாட்டின் நிலமை, அதன் தேவை ஆகியவைகளைப்புரிந்து கொள்ளக்கூடிய திறமையை வளர்க்க வேண்டும். பெண்கள் தன் நாட்டுக்கும், சமுதாயத்தக்கும் தன்னால் இயன்றளவு வரையறையை மீறாமல் உதவி, சேவை செய்யலாம். எந்த நாடாக இருந்தாலும் சரியே, பெண்களின் பண்பாடு, கலாச்சாரம் ஆகிய அளவுகோல்களின் துணையைக் கொண்டே நிர்மாணிக்கப்படுகிறது. வருங்காலத் தலைமுறை, நிகழ்காலத் தாய்மார்களையே ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. இன்றைய தலைமுறை சென்ற தலைமுறையில் வாழ்ந்த தாய்மார்களைப் பின்பற்றாததே இன்றைய அதர்ம, அக்கிரம, அநியாயங்களுக்குக் காரணம். நடந்தது நடந்து விட்டது, அது போகட்டும். இனி வருங்கால சந்ததியினரையாவது நாம் காப்பாற்ற வேண்டும். அதற்குப் பெண்கள், பழங்காலப் பெண்மணிகளை முன்மாதிரியாகக் கொண்டு வாழ வேண்டும்.

எந்தக் காலத்திலும் பெண்கள் நாட்டின் முது கெலும்பு போன்றவர்கள்; இதயம் போன்றவர்கள். உயிர் மூச்சு போன்றவர்கள். இந்தப் பிரபஞ்ச நாடகத்தில், முக்கியமான, பவித்திரமான பாகத்தை ஏற்றிருப்பவர்கள் தாய்மார்களே, நீதியை, நேர்மையை நிர்மாணிக்கத் தாய்மார்கள் உறுதி பூண வேண்டும். பிரபஞ்சத்தின் வருங்கால சந்ததியினரான தம் குழந்தைகளுக்கு நீதியை, ஆன்மிகத் தத்துவங்களைப் போதிக்க வேண்டும். தாய் அறவழியை மேற்கொண்டால், குழந்தைகளும் தாயைப் பின்பற்றி நடப்பார்கள். தாய் நீதி,

நேர்மை, ஒழுக்க விதிகள் ஆகிய வைகளை மேற்கொண்டால், குழந்தைகளும் அவைகளைக் கற்றுக்கொள்ளும். ஆக, நாட்டின் வளர்ச்சிக்கும் சரி, வீழ்ச்சிக்கும் சரி தாய்க்குலமே காரணம்; அவைகளின் படிப்பு, பாண்டித்தியம், செயல் திறன் ஆகியவைகளே காரணம்.

இன்றைய நிலைமைக்கு வீட்டுப் பெரியவர்களான தாய் தந்தையர்தாம் மூல காரணம். இன்றைய மாணவர்களிடம் (Students) நம் நாட்டின் பண்பாட்டின் சாயலைக் கூடக் காணமுடிய வில்லை. ஆத்மதத்துவம் அவர்களுக்கு நகைப்புக்குரிய செய்தியாகத் தோன்றுகிறது. அயல் மொழிகளைக் கற்றுக் கொள்ளுதல், உடையலங்காரத்தை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவைகளே பாரத நாட்டுக் கலாச்சாரம் என்பது போல் மாறிவிட்டது.

இது நம் நாட்டுக் கலாச்சாரம் அல்ல. இன்றைய படித்த பெண்களுக்கு வீட்டு வேலைகளில் பழக்கம் இல்லை. வீடு என்பதை உணவு விடுதி போலப் பாவிக்கத் தொடங்கிவிட்டனர். எப்பொழுதும் வேலைக்காரர்களையும், சமையல்காரர்களையுமே நம்பிக்கொண்டிருக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. படித்த பெண் வீட்டுக்கு ஓர் அலங்கார பொம்மையாக-கவர்ச்சிமிக்க கலைப் பொருளாக தான் இருக்கிறாள். அப்படிப்பட்ட பெண் கணவனுக்கு வெறும் சுமை தான்; அதுவுமின்றி பல நோய்களுக்கு இருப்பிடமாகவும் இருக்கிறார்கள் பெண்கள். வீட்டில் சிரமப்பட்டு வேலைகள் எதுவும் செய்யாமல், உண்பது. உறங்குவது என்றிருப்பதால், உடலில் சோம்பல் வளர்ந்து, ஜீரண சக்திகுறைந்து நோய்கள் பெருகிவிட்டன. அதனால் நோய்கள் உடலை ஜீரணம் செய்து கொண்டிருக்கின்றன.

இன்றைய பெண்களின் தன்னிச்சையான போக்கினால் தர்மம் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது. கற்ற கல்வியை விவேகத்தோடு நற்செயல்களில் ஈடுபடுத்தாமல், நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளாமல், கேவலமான உலக சுகங்களே முக்கிய மென்று கருதி தம்மைத் தாமே துன்புறுத்திக் கொள்ளுகிறார்கள் பெண்கள். இன்றைய பெண்குலம், பட்டம் பெறுதல், பதவி வகித்தல், முன்பின் யோசிக்காமல், அனைவரோடும் கலந்து பழகுதல் இவைகளையே பிரதானமாகக் கொண்டிருக்கிறது.

பெரியவர்களிடம் பணிவோ பாவச் செயல்களைச் செய்வதில் பயமோ துளியும் இல்லை. இறை நம்பிக்கை இன்மை, கணவனை பொம்மையாக ஆட்டிப் படைத்தல், தன் இச்சைப்படி எல்லாவற்றையும் அனுபவித்து, செய்த தவறுக்குப் பச்சாத்தாபமின்மை ஆகியவைகளா படிப்பின் இயல்புகள்? இல்லை; ஒரு நாளும் இல்லை. சரியான படிப்பின்மை அறியாமை ஆகியவைகளின் விபரீத உருவங்களே இவைகள். இந்த நிலைமை கல்விக்கு கெட்ட பெயரைத் தேடித்தருகிறது. இந்த நிலைமை பெண் தர்மத்துக்கே கேடு விளைவிக்கும். கணவன் வீட்டைத் தெய்வீகம் நிரம்பிய தேவாலயாமாகக் கருதும் பெண் வாழும் இல்லம் எல்லாக் கலைகளுக்கும் இருப்பிடமெனலாம். அதற்கு சமமான வீடு உலகில் வேறு எங்கும் இல்லை என்று சொல்லலாம். ''கணவன் வீடே பெண்ணுக்கு பல்கலைக் கழகம், தேவாலயம், விளையாட்டுத் திடல், அரசியல் அரங்கம், தியாக பலிபீடம், ஏகாந்த ஆசிரமம் என்று சிறந்த பக்தர் ஒரு வர் பாடியுள்ளார்.

படித்த பெண்கள் தங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கும், சமுதாயத்துக்கும், தம்முடைய சக்தி, திறமை, நோக்கம், விருப்பம், மனப்போக்கு, இயல்பு, படிப்பின் தகுதி, வாழ்க்கை வசதி, ஒழுக்கம், பாண்டித்தியம் இவைகளுக்குத் தகுந்தபடி, தம்மேல் மாசுபடாமல், முடிந்த அளவு சேவை செய்யலாம். தனக்கோ, தன் குடும்பத்துக்கோ, தன் தாய் தந்தையர்களுக்கோ, தன் சீலத்துக்கோ எந்த விதமான அபகிர்த்தியோ, அவமரியாதையோ நேராவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். சீலமற்ற பெண்கள் உயிரோடிருந்தாலும், இறந்தவர்களுக்குச் சமம்.

அதனால் பெண்கள் வெளியுலகில் நடமாடும் போது மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். ஆண்கள் அதிகமாகப் பேசுதல், கலந்து பழகுதல் ஆகியவைகளை குறைத்துக் கொள்ள வேண்டும். கணவனின் கௌரவத்துக்கும், புகழுக்கும், பெயருக்கும் களங்கம் நேரம் பழகுவதே படிப்பின் பயன். ''நன்னடத்தையே படிப்பின் பலன்" என்று மகான்கள் சொல்லியிருக்கிறார்கள்.

பெண்கள் இக்காலக் கல்வியை கற்றுக்கொள்ளக் கூடாதென்றும் சமுதாயத்தோடு கலந்து பழக கூடாதென்றும் நான் கூறுவதாக

எடுத்துக்கொள்ளக் கூடாது. கல்வி முறை எப்படியிருந்த போதிலும், சமுதாயத்தோடு கலந்து பழக வேண்டி நேர்ந்தபோதிலும், நற்பண்புகளும், நற்செயல்களும் உடையவர்களாய், சீலம் நிரம்பியவர்களாய், நம் சனாதன தர்மங்களில் நம்பிக்கை உடையவர்களாய் இருந்தால் போதும். அவர்களை இக்காலப் படிப்போ , சமுதாயமோ எதுவும் செய்ய முடியாது. இன்றைய கல்வியும், சமுதாயமும் மட்டுமே கெடுதல் செய்யக் கூடியவை அல்ல. அவைகள் மக்களைக் கெடுப்பதற்காகவும் இல்லை . மக்களின் பண்புகளுக்குத் தக்கவாறு அவைகள் அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டுக் கெடுதலோ அன்றி நன்மையோ செய்கின்றன. பூனை தன் குட்டிகளையும் எலியையும் ஒரே வாயால்தான் கவ்வி பிடிக்கிறது. ஆனால் எலிகளைக் கொன்றுவிடுகிறது. குட்டிகளைக் காப்பாற்றுகிறது. இது (அழிப்பதும், காப்பதும்) வாயின் தன்மையா? இல்லையல்லவா? இது குணத்தையும் சுபாவத்தையும் பொறுத்ததே. கற்ற கலைகளையும் நல்ல முறையில் பயன்படுத்தினால் அது விவேகத்தை வளர்த்துப் பரோபகாரச் செயல்களில் ஈடுபடுத்தும்; ஆத்ம விசாரணை, உயர்ந்த தத்துவங்களில் விருப்பம் ஆகியவைகளில் ஈடுபடுத்தி மிக உயர்ந்த நிலையான பரமஹம்ஸ நிலைக்கு மாற்றும். விவேகமின்றி தவறான முறையில் கல்வியை உபயோகித்தால், பொய்மை, கொடுமை, நேர்மையற்ற செயல்கள், பண்புக் குறைவான நடத்தை ஆகியவைகளை வளர்த்து, கெட்ட வழிகளில் இட்டுச் சென்று, மனித வாழ்க்கையையே மாசுபடுத்திவிடும். அப்பொழுது பிரேமையே நஞ்சாகி விடும்.

ஏராளமாகப் படித்து, பட்டம் பெற்று, சமூக உயர்வும் தகுதியும் பெற்ற கணவன் கிடைத்திருந்தாலும், அல்லது தானே நிறையப் படித்து, பட்டம் பெற்று உயர்ந்திருந்தாலும், நற்குணமே தன் சௌகரியமாக, சீலமே உயிர்மூச்சாக நாணமே ஜீவனாக சத்தியத்தை உள்ளடக்கிய செயல்களே தன் அன்றாடக் கடமைகளாகக் கொண்டு, பாவ பயம், தெய்வ பயம் என்னும் முளைகளை இதயத்தில் நட்டு வளர்த்து, பெண்ணின் பெருமையை நினைவு கூர்ந்து, பெண் தர்மத்திலிருந்து பிறழாமல் வாழ வேண்டும். மதம், ஒழுக்கம், பௌதிக நெறி ஆகியவைகளிலும், நினைவு, சொல், செயல் ஆகியவைகளிலும் சத்தியத்தை, தர்மத்தை அநுசரித்து, சகல கலைகளின் சாரமும் அதுவே என்று கொண்டு, தன் கௌரவத்திற்கு ஊறு நேராமல், கற்பு

நெறி பிறழாமல் வாழ்வதே பெண்ணின் கடமை. பெண் தர்மமே பெண்ணின் பிறப்புரிமை. இதை பெண் ஒரு நாளும் மறக்கக் கூடாது.